**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 19/2020 |
| Name | : | Imam Jaffer Sathik |
| P.W. | : | 1 |
| Father Name | : | Sahul Hameed |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**17.04.2026**

**எதிரிகள் 1 முதல் 4 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் சோழமாதேவியில் வசிக்கிறேன். நான் சமையல் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 01.07.2019 ம் தேதி கணியூர் பெட்ரோல் பங்க் அருகே உள்ள ரபனா பிரியாணி கடையில் நான் இருந்த போது மதியம் 02.00 – 02.30 மணி அளவில் ஆஜர் எதிரிகள் நான்கு பேரும் பிரியாணி சாப்பிட வந்தார்கள் அந்த சமயம் அவர்கள் பெயர் தெரியாது. நான்கு பேரும் தீவிர மது போதையில் இருந்தார்கள். பிரியாணி சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போது ஆஜர் எதிரி மனோகரன் கல்லா பெட்டி மீது ஏறி அமர்ந்தார். கல்லா பெட்டியில் இருந்து இறங்குமாறு நான் சொன்னேன். இறங்க முடியாது என்னடா பண்ணிப்போடுவ என்று சத்தம் போட்டு வெங்காயம் வெட்டுவதற்காக வைத்திருந்த கத்தியை எடுத்து என்னை வெட்ட வந்தார். நான் எனது இடது கையால்

அவரை தடுத்த போது எனது கட்டை விரல் மற்றும் ஆள் காட்டி விரல் இடையே வெட்டுக்காயம் ஏற்பட்டது. மற்ற மூவரும் என்னை அடித்து கீழே தள்ளிவிட்டார்கள். கடையில் இருந்த எனது மனைவி மெஹர் பானுவையும் கீழே தள்ளவிட்டார்கள். காவல் நிலையம் அருகில் இருந்ததால் நானும், எனது மனைவியும் அங்கு ஓடிவிட்டோம். போலீசார் வந்து பார்ப்பதற்குள் எதிரிகள் அனைவரும் ஓடிவிட்டார்கள். இது சம்மந்தமாக சம்பவம் நடந்த அன்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் கத்தியால் தான் என்னை வெட்டினார்கள். **கத்தி அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மறு நாள் காலை போலீசாருக்கு எதிரிகளை அடையாளம் காண்பித்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) அந்த கடையின் உரிமையாளர் நானா என்றால் ஆமாம். அந்த கடையை எத்தனை வருடமாக நடத்தி வந்தேன் என்றால் அந்த சமயத்தில் மூன்று வருடங்களாக நடத்தி வந்தேன். கடையில் கண்காணிப்பு கேமரா இருந்ததா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொன்ன சமயத்தில் கடையில் எத்தனை பேர் இரந்தார்கள் என்றால் நானும் எனது மனைவியும் மட்டும் தான் இருந்தோம் அப்போது தான் வியாபாரம் ஆரம்பித்தோம். பொதுவாக எத்தனை மணிக்கு கடையை திறப்பேன் என்றால் காலை 11.00 மணிக்கு கடைக்கு சென்று உணவு தயார் செய்து மதியம் 02.00 மணி அளவில் திறந்துவிடுவேன். எனது கடையில் எத்தனை பேர் வேலைக்கு உள்ளார்கள் என்றால் வேலைக்கு ஆட்கள் யாரும் இல்லை.

(2) பிரச்சனை சாப்பிடும் முன்பு வந்ததா அல்லது பின்பு வந்ததா என்றால் முதலில் இரண்டு பேர் வந்தார்கள். (சாட்சி அடையாளம் காட்ட எதிரிகள் பெயர் கேட்ட போது அவர்கள் சக்திவேல் மற்றும் ஆறுமுகம் என்று சொன்னார்கள்) அவர்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்த போது மீதி இரண்டு பேர் வந்தார்கள். (சாட்சி அடையாளம் காட்ட எதிரிகள் பெயர் கேட்ட போது அவர்கள் மனோகரன் மற்றும் முத்துச்சாமி என்று சொன்னார்கள்). அதில் ஒருவர் கல்லாப் பெட்டி மீது ஏறி அமர்ந்தார். இதற்கு முன்பு ஆஜர்

எதிரிகளை எங்காவது பார்த்துள்ளேனா என்றால் சாட்சி நான்கு பேரில் ஒருவரை அடையாளம் காட்டி அவர் எனது கடைக்கு வாடிக்கையாக வருவார் என்று சொன்னார் (சாட்சி அடையாளம் காட்ட எதிரி பெயர் கேட்ட போது அவர்கள் சக்திவேல் என்று சொன்னார்)

(3) இதற்கு முன்பு எனது கடையில் வேறு ஏதாவது பிரச்சனை ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. முதலில் இரண்டு பேர் வந்ததாக சொல்லியுள்ள நிலையில் அவர்களும் மது அருந்திய நிலையில் தான் வந்தார்களா என்றால் ஆமாம். உள்ளே வரும் போதே அவர்கள் மது அருந்தியிருந்தது எனக்கு தெரிந்ததா என்றால் சாப்பிட இலை போடும் போது தெரிந்தது. எதிரிகள் மது அருந்தியிருந்தார்கள் என்று புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கடையில் சமையல் செய்வது ஒரு பகுதியாகவும், சாப்பிடுவது ஒரு பகுதியாகவும் உள்ளது என்றால் சரிதான். கடையின் உரிமையாளராகிய நான் கத்தியை பாதுகாப்பாக வைத்திருப்பது எனது கடமை என்றால் பிரியாணியை கடையின் முன்பு எடுத்து வந்து வைத்து அங்கு வந்து தான் நான் வெங்காயம் வெட்டுவேன். அந்த சமயத்தில் கத்தி எனது கையில் இருந்ததா என்றால் நான் வெங்காயம் வெட்டிக்கொண்டிருந்த போது எதிரிகள் சாப்பிட வந்ததால் சிறிது வெங்கயாத்தை எடுத்து தயிரில் கலப்பதற்காக நான் கத்தியை அங்கே வைத்துவிட்டு வெங்காயத்தை எடுத்தேன். கல்லாப்பெட்டியில் ஏறி உட்காரும் போது நான் வெங்காயம் வெட்டிக்கொண்டிருந்தேனா என்றால் இல்லை. கல்லப்பெட்டியில் உட்காரும் போது எனது மனைவி எங்கிருந்தார் என்றால் அவர்களுக்கு பிரியாணியை இலையில் வைத்துக்கொண்டிருந்தார்.

(4) கல்லாப் பெட்டியில் ஒருவர் தான் ஏறி உட்கார்ந்தார் என்றால் சரிதான். மீதி மூன்று பேரும் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்றால் இருவர் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள் மற்றொருவர் ஏண்டா இங்கு சாப்பிடுகிறீர்கள் என்று கேட்டுக்கொண்டிருந்தார். கல்லாப் பெட்டிக்கும் நான் வெங்காயம் வெட்டிக்கொண்டிருந்ததாக சொல்லும் இடத்திற்கும் சுமார் 7 அடி தூரம் இருக்கும். எதிரி கத்தியை எடுத்து வெட்ட வந்ததாக சொல்லும் சமயத்தில் அவரை யாரும் தடுக்கவில்லையா என்றால் வேறு யாரும் அங்கு இல்லை. எனது மனைவி தடுக்கவில்லையா என்றால் தடுக்க வந்த எனது மனைவியை புடனியை பிடித்து கீழே

தள்ளிவிட்டார்கள்.

(5) சம்பவத்தில் யார், யாருக்கு அடிபட்டது என்றால் எனக்கும், எனது மனைவிக்கும் அடிப்பட்டது. அடித்த உடனே நான் காவல் நிலையம் சென்றுவிட்டேனா என்றால் ஆமாம் 5 நிமிடத்திற்குள் சென்றுவிட்டேன். மருத்துவமனைக்கு செல்லவில்லையா என்றால் காவல் நிலையம் சென்றுவிட்டு மருத்துவமனைக்கு சென்றேன். காவல் நிலையத்தில் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன் என்றால் சுமார் 02.00–02.30 மணி அளவில் கொடுத்தேன். புகாரை எழுத்து மூலமாக கொடுத்தேனா அல்லது வாய் மொழியாக கொடுத்தேனா என்றால் எழுத்து மூலமாக கொடுத்தேன். நான் சொல்லச் சொல்ல எழுதினார்கள். புகாரை யார் எழுதினார்கள் என்றால் அங்கிருந்த கடத்தூரைச் சேர்ந்த ஒரு தெரிந்த நபர் எழுதினார் அவர் பெயர் தெரியவில்லை. சம்பவம் நடந்த போது அந்த நபர் இருந்தாரா என்றால் இல்லை.

(6) நான் காவல் நிலையத்திற்கு சென்ற பின்பு அவர் வந்தாரா என்றால் காவல் நிலையத்திற்கு சென்றுவிட்டு வந்த போது அவர் அந்த வழியாக வந்தார். புகார் மனு கொடுத்த பின்பு தான் மருத்துவமனை சென்றேனா என்றால் ஆமாம். எதிரிகள் கடையில் சாப்பிடும் போது சாப்பாடு நல்லாயில்லை சுத்தமாக செய்யவில்லை என்று சொன்னார்கள் என்றும் நான் தான் கோபமடைந்து கத்தியை எடுத்து அவர்களை தாக்க சென்றேன் என்றும், எதிரிகளுக்கும், இந்த புகாருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. கல்லாப்பெட்டியில் ஒருவர் உட்கார்ந்து கொண்டும் இருவர் சாப்பிட்டுக்கொண்டும் இருந்த நிலையில் நான்கு பேர் என்னை எப்படி தாக்கினார்கள் என்றால் கல்லாப் பெட்டியில் இருந்தவரை இறங்கச் சொன்ன போது அவர் என்னை தாக்கினார் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் எழுந்து வந்து என்னை தாக்கினார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லும் மதியம் நேரத்தில் போக்குவரத்து அதிகமாக இருக்கும் என்றால் நான் ஊர் கடைசியில் கடை வைத்திருந்தேன் அங்கு அதிகமாக போக்குவரத்து இருக்காது. எனது கடைக்கு அருகில் வேறு கடைகள் இல்லையா என்றால் ஒரு ஒர்க் ஷாப் இருந்தது அந்த சமயத்தில் அந்த கடை திறந்திருந்தது. அந்த கடையின் உரிமையாளர் தடுக்க வரவில்லையா என்றால் வரவில்லை. மேற்படி சம்பவம் நடைபெற்றிருந்தால் பக்கத்தில் உள்ள யாராவது தடுக்க வந்திருப்பார்கள் என்றும் அப்படி ஒரு சம்பவமே

நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.04.17 13:27:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 19/2020 |
| Name | : Mehar Banu |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**17.04.2026**

**எதிரிகள் 1 முதல் 4 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் சோழமாதேவியில் வசிக்கிறேன். நான் சமையல் வேலை செய்கிறேன். அ.சா.1 எனது கணவர். ஆஜர் எதிரிகளை தெரியும். 01.07.2019ம் தேதி மதியம் 02.30 மணி அளவில் கணியூர் பெட்ரோல் பங்கு அருகில் நாங்கள் வைத்திருந்த ரபனா பிரியாணி கடையில் எனது கணவர் சாப்பாடு செய்துவிட்டு வெங்காயம் வெட்டிக்கொண்டிருந்தார் முதலில் இரண்டு பேர் வந்தார்கள் அவர்கள் பெயர் தெரியாது. (சாட்சி அடையாளம் காட்ட எதிரிகள் பெயர் கேட்ட போது அவர்கள் சக்திவேல் மற்றும் ஆறுமுகம் என்று சொன்னார்கள்). அவர்கள் இருவருக்கும் இலை போட்டுக்கொண்டிருந்தேன். மறுபடியும் இரண்டு பேர் வந்தார்கள். அவர்கள் பெயர் தெரியாது. (சாட்சி அடையாளம் காட்ட எதிரிகள் பெயர் கேட்ட போது அவர்கள் மனோகரன் மற்றும் முத்துச்சாமி என்று சொன்னார்கள்). எனது கணவரை கெட்ட வார்த்தையால் திட்டினார்கள். எனது கணவர் கையில் இருந்த கத்தியை ஒருவர் எடுத்து வந்து என்னை அடித்து கீழே தள்ளவிட்டார். மற்றொருவர் கல்லாப் பெட்டியில் மீது ஏறி அமர்ந்து என்னை பேச வேண்டாம் என்று கெட்ட வார்த்தையில் திட்டினார். எனது கணவரின் கையை எதிரி வெட்டினார் அவர் பெயர்

தெரியாது (சாட்சி அடையாளம் காட்ட எதிரி பெயர் கேட்ட போது அவர் முத்துச்சாமி என்று சொன்னார்). இது சம்மந்தமாக கணியூர் காவல் நிலையத்தில் எனது கணவர் புகார் கொடுத்தார். இது சம்மந்மாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) கடையின் உரிமையாளர் எனது கணவர் என்றால் சரிதான். எத்தனை வருடங்களாக கடை நடத்தி வருகிறோம் என்றால் சுமார் 5 வருடங்களாக நடத்தி வருகிறோம். கடை இருக்கக்கூடிய இடத்தில் நிறைய போக்குவரத்து இருக்கும் என்றால் சரிதான். ஆள் நடமாட்டம் இருக்கக்கூடிய பகுதி என்றால் சரிதான். கடையில் எத்தனை பேர் வேலை செய்கிறார்கள் என்றால் நானும், எனது கணவர் மட்டும் தான். சம்பவம் நடந்த சமயத்தில் எத்தனை பேர் கடையில் இருந்தார்கள் என்றால் நாங்கள் மற்றும் எதிரிகள் தான் இருந்தோம் வேறு யாரும் இல்லை.

(2) முதலில் இரண்டு பேர் தான் சாப்பிட வந்தார்கள் என்றால் சரிதான். யார் அந்த இரண்டு பேர் என்றால் அவர்கள் பெயர் தெரியாது. (சாட்சி அடையாளம் காட்ட எதிரிகள் பெயர் கேட்ட போது அவர்கள் சக்திவேல் மற்றும் ஆறுமுகம் என்று சொன்னார்கள்). அவர்கள் எத்தனை மணிக்கு கடைக்கு வந்திருப்பார்கள் என்றால் சுமார் 02.00–02.30 மணிக்கு வந்திருப்பார்கள். அந்த சமயத்தில் எனது கடையில் எல்லாம் தயார் செய்து சாப்பாடு போட ஆரம்பித்துவிட்டோம் என்றால் சரிதான். எங்கள் கடையில் சமையல் செய்வது ஒரு பகுதியாகவும், சாப்பாடு செய்வது ஒரு பகுதியாகவும் உள்ளது என்றால் சரிதான்.

(3) கல்லாப் பெட்டி மீது ஏறி அவர் பிரச்சனை செய்ததாக சொன்ன சமயத்தில் நான் எங்கு இருந்தேன் என்றால் நான் சாப்பாடு கொடுத்துக்கொண்டிருந்தேன். கல்லாப்பெட்டிக்கும், கத்தி இருந்த இடத்திற்கும் சுமார் எவ்வளவு தூரம் என்றால் அது பக்கத்திலேயே தான் இருந்தது. கல்லாப்பெட்டி அருகே கத்திக்கு என்ன வேலை வெங்காயம் வெட்டிக்கொண்டிருந்தார். அந்த சமயத்தில் கத்தி எனது கணவரிடம் தான் இருந்தது என்றால் சரிதான். அவர் கையில் வைத்திருந்தார் என்றால் சரிதான்.

(4) சண்டை நடந்த பின்பு நான் என்ன செய்தேன் என்றால் நான் கணியூர் காவல் நிலையம் சென்றேன். கணவருக்கும், எதிரிகளுக்கும் வாக்குவாதம் ஏற்பட்ட போதே நான்

காவல் நிலையம் சென்றேன் என்றால் ஆமாம். வாக்குவாதம் ஏற்பட்ட போதே நான் காவல் நிலையம் சென்றதால் எனது கணவருக்கு வெட்டுப்பட்டதை நான் பார்த்திருக்க முடியாது என்றால் சரியல்ல எனது கணவருக்கு வெட்டுப்பட்டு ரத்தம் வந்தது அதன் பின்பு தான் நான் காவல் நிலையம் சென்றேன். காவல் நிலையம் சென்று என்ன செய்தேன் என்றால் எனது கணவரை போட்டு அடிக்கிறார்கள் வாங்க என்று கூப்பிட்டேன். அப்போது போலீசார் என்னுடன் வந்து கடையில் வைத்து தான் புகாரை வாங்கினார்களா என்றால் ஆமாம். புகாரை யார் கொடுத்தது என்றால் எனது கணவர் கொடுத்தார். புகார் கொடுத்த போது யார் இருந்தார்கள் என்றால் நானும், எனது கணவரும் இருந்தோம். புகார் கொடுத்த போது எதிரிகள் நால்வரும் எங்கிருந்தார்கள் என்றால் கடையில் தான் இருந்தார்கள்.

(5) புகாரை எனது கணவர் கைப்பட எழுதி கொடுத்தாரா அல்லது வாய் மொழியாக சொன்னாரா என்றால் வாய் மொழியாக சொன்னார். அந்த புகாரை போலீசார் எழுதினார்களா என்றால் ஆமாம். போலீசார் வரும் போதே பேப்பர் மற்றும் பேனாவை கொண்டு வந்தார்களா என்றால் ஆமாம். எங்கள் கடையின் அருகில் வேறு கடை உள்ளதா என்றால் மரத்தை போட்டு வைத்திருப்பார்கள் கடைகள் எதுவும் இல்லை. சாட்சி மீண்டும் ஒரு ஒர்க் ஷாப் தான் இருந்ததாக சொன்னார். பிரச்சனை நடந்த போது ஒர்க் ஷாப் திறந்திருந்ததா என்றால் ஆமாம். ஒர்க் ஷாப்பில் ஆட்கள் இருந்தார்களா என்றால் இல்லை வெளியே சென்று விட்டு வந்தார்கள். இவ்வளவு பிரச்சனை நடந்த போது சத்தம் கேட்டு வெளியில் இருந்து தடுக்க யாரும் வரவில்லையா என்றால் இல்லை.

(6) எனது கணவருக்கு கத்தி பட்டு காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ள நிலையில் அது யாரால் ஏற்பட்டது என்றால் அவர் பெயர் தெரியாது. (சாட்சி அடையாளம் காட்ட எதிரிகள் பெயர் கேட்ட போது அவர் முத்துச்சாமி என்று சொன்னார்). அவர் தான் கல்லாப் பெட்டியில் உட்கார்ந்திருந்தாரா என்றால் இல்லை அவர் அருகில் உள்ளவர் உட்கார்ந்தால் அவர் பெயர் தெரியாது. (சாட்சி அடையாளம் காட்ட எதிரி பெயர் கேட்ட போது அவர் மனோகரன் என்று சொன்னார்). அவர் கையில் கத்தி எப்படி போனது என்றால் எனது கணவர் வெங்காயம் வெட்டிக்கொண்டிருந்த போது அவர் கையில் இருந்து பிடுங்கி உன்னை கொலை செய்துவிடுவேன் என்று சொன்னார். சம்பவம் நடந்த போது நான் கடையில் இல்லை என்றும், பிரச்சனை ஆரம்பிப்பதற்கு முன்பு நான் வெளியில்

இருந்தேன் என்றும் சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. காயம்பட்ட நபர் எனது கணவர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.. DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.04.17 13:27:34 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்